2015 பிப்ரவரி 20]

40—

வணிக வளாகம்

*38886—**திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டி தொகுதி, திருத்துறைப்பூண்டி நகராட்சி, செங்கமலக் குளக்கரையில் வணிக வளாகம் கட்ட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசையை நோக்கி வணங்குகின்றேன். திருத்துறைப்பூண்டி நகராட்சியில் அமைந்துள்ள செங்கமலக் குளத்தின் கரையில் நகராட்சி சட்ட விதிகளின்படி வணிக வளாகம் கட்ட இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி நகராட்சி, செங்கமலக் குளத்திற்கு நீர் வர வேண்டிய வாய்க்கால் முழுவதும் தூர்ந்து போய் இருக்கின்றது. அதனால் ஆற்றிலிருந்து முள்ளியாறு வாய்க்கால் மூலமாக தண்ணீர் வருவதற்கு வழியில்லாமல் இருக்கின்றது. அந்தக் குளத்திலே மழைநீர் தேங்கி மிகப் பெரிய சுகாதார சீர்கேட்டை உண்டுபண்ணுகிறது. அத்துடன் அந்தக் குளம் யாருக்கும் பயன் இல்லாத நிலையில் இருக்கின்றது. ஆகவே, அந்தக் குளக் கரையில் வணிக வளாகம் கட்டினால் அந்த நகராட்சிக்கு வருமானம் வரும். ஆகவே, அங்கே வணிக வளாகம் கட்டுவதற்கான நடவடிக்கை

எடுக்க வேண்டுமாய் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாம் முறையாக மாபெரும் மக்கள் சக்தியுடன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் இரண்டு அற்புதமான திட்டங்களைக் கொண்டுவந்தார்கள். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு* I.U.D.M. *என்ற ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் வருடா வருடம் 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். சென்னை மாநகராட்சிக்கு* C.M.C.D.M. *என்ற திட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டம், இதற்கு வருடா வருடம் 500 கோடி ரூபாய் நிதி ஒதுக்கினார்கள். தமிழகத்திலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தந்த அற்புதமான திட்டத்தின்மூலம் கூடுதலாக அடிப்படை வசதிகள் செய்ய பெரிதும் பயன்பட்டு மக்களால் பாராட்டப்படுகின்றன.*

I.U.D.M. *திட்டத்தின்கீழ் திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு அடிப்படை வசதிக்காக ஆணையர்மூலம் 4 கோடி ரூபாய் நிதி கேட்கப்பட்டு, அதற்கு மாண்புமிகு மக்களின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி திருத்துறைப்பூண்டி நகராட்சியில் மக்கள்தொர்கை 24,334 ஆகும். இந்நகராட்சியின் பரப்பளவு 11,935 சதுர கி.மீ. ஆகும். இந்நகராட்சியின் ஆண்டு வருமானம் ரூ.7.37 கோடியாகும். இந்நகராட்சியின் பழைய பேருந்து நிலையம் தினசரி காய்கறி கடையாக மாற்றப்பட்டு தற்போது 60 கடைகள் உள்ளன. மேலும், புதிய பேருந்து நிலையத்தில் 42 கடைகள் உள்ளன. இந்நகராட்சியில் உள்ள செங்கமலக் குளம் வருவாய் ஆவணங்களில் குளம் புறம்போக்கு என வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இக்குளம் முற்றிலும் களிமண்ணாக உள்ளது. இதன் பரப்பளவு 13 ஏக்கராகும். நகராட்சி சட்ட விதிகளின்படி இக்குளக்கரையில் வணிக வளாகம் கட்ட*

2015 பிப்ரவரி 20]

இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி பழைய பேருந்து நிலையத்தில் தற்போது காய்கறி கடைகள் இயங்கி வருகின்றன. அந்தப் பேருந்து நிலையக் கட்டடம் மிகவும் பழுதடைந்து விழும் நிலையில் உள்ளது. ஆகவே, அந்தக் கட்டடத்தை இடித்துவிட்டு புதிய காய்கறி வணிக வளாகம் கட்டலாம். அதேபோல், அந்தக் கட்டடத்தில் இருக்கக்கூடிய வர்த்தக நிறுவனங்களுக்கும் புதிய கடைகள் கட்டிக் கொடுக்கலாம். ஆகவே அந்தப் பழைய பேருந்து நிலையக் கட்டடத்தை இடித்துவிட்டு புதிய காய்கறி வணிக வளாகம் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கை அந்த நகராட்சியினுடைய வருவாய் அளவினைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, அங்கே அவசியம் இருப்பின், கண்டிப்பாகப் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.